# நடப்பு நிகழ்வுகள் – 2023

## செப்டம்பர்

## தமிழ்நாடு

- 11 வது ஆசிய ஜவுளி மாநாடு கோவையில் நடைபெற்றது.
  - கருப்பொருள்: " 2025 & அப்பால் ஆசியாவின் ஜவுளி உற்பத்தி மற்றும் நுகர்வோருக்கான உலகளாவிய மையம் " ஆகும் .
  - ஜவுளித்துறை இந்திய பொருளாதாரத்தில் 8 சதவீதம் ஏற்றுமதி செய்கிறது.
  - ஜவுளி ஏற்றுமதியில் தமிழநாடு 40% பங்களிக்கிறது.
- மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சகம் நாட்டிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் ராமநாதபுரம் மாவட்டம் வலமாவூரில் பல்நோக்கு கடற்பாசி பூங்காவிற்கு அடிக்கல் நாட்டியது.
  - இந்தியா உலகளவில் மீன் வளர்ப்பு மூலம் 2வது பெரிய மீன் உற்பத்தியாளர்.
  - 4வது பெரிய மீன் ஏற்றுமதியாளர், உலக மீன் உற்பத்தியில் 7.7% பங்களிப்பு .
  - உள்நாட்டு மீன் உற்பத்தியில் 1வது இடம், உலகளவில் ஒட்டுமொத்த மீன் உற்பத்தியில் 3வது இடம்.
- அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த ISRO பெண் விஞ்ஞானி வளர்மதி உடல்நலக் குறைவால் காலமானார்
  - அரியலூரில் பிறந்த இவர், 2015இல் தமிழ்நா டு அரசின் அப்துல்கலாம் விருதைப் பெற்ற முதல் அறிவியல் அறிஞர். இஸ்ரோவில் 1984ஆம் ஆண்டு முதல் பணியாற்றி வருகிறார்.
  - 2012இல் உள் நாட்டிலேயே உருவான முதல் ரேடார் இமேஜிங் செயற்கைக்கோள் (RISAT-1) திட்டத்தின் இயக்குநராகப் பணியாற்றினார். இவர், இஸ்ரோவின் செயற்கைக்கோள் திட்ட இயக்குநராகப் பணியாற்றிய இரண்டாவது பெண் அறிவியல் அறிஞர் ஆவார்.
- தமிழக சட்டசபையில், இந்தாண்டு ஏப்., 21ல், 'தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு சிறப்பு திட்டங்கள் சட்டம் - 2023' நிறைவேற்றப்பட்டது.
  - தனியாருக்கு சொந்தமான நிலத்தின் வழியாக, தண்ணீர் அதன் போக்கை மாற்றிக் கொண்டால், அந்த நிலத்தை அரசு முடிவின்படி வழங்க வேண்டும். இந்த நிலப்பரிமாற்ற முறையை, சட்டப்பூர்வமாக ஒழுங்குபடுத்தவும், நீர் நிலையை பாதுகாக்கவும், இந்த சட்டம் வழிவகை செய்கிறது
  - வணிகம், தொழில் சார்ந்த திட்டத்தை, 247 ஏக்கருக்கு குறையாத நீர்நிலைகள் உள்ள பகுதியில் செயல்படுத்த ஒருவர் விரும்பினால், அந்த திட்டத்திற்கு சிறப்பு அனுமதி

கோரி, அரசிடம் விண்ணப்பிக்கலாம்.

•நீர் வரவு செலவு அறிக்கையை அறிமுகம் செய்த முதல் மாநிலம் – கேரளா

- தமிழ்நாட்டில் முதன் முதலாக திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலையில் உள்ள மலைவாழ் மக்களின் வாழ்வாதாரத்தை காக்கும் விதமாக தேனீ பூங்கா அமைக்கப்படவுள்ளது.
- தூத்தூக்குடி மாவாட்டம் வ. உ. சிதம்பரானர் துறைமுகத்தில் திரவ ஹைட்ரஜன் உற்பத்தி செய்யும் திட்டம் தொடங்கப்படவுள்ளது.
- இந்தியாவின் தேசிய கீதத்தை இயற்றிய கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் நினைவைப் போற்றும் வகையில் அவரது சிலை தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் சென்னை ராணி மேரி கல்லூரி வளாகத்தில் திறக்கப்பட்டது.
- தமிழ்நாடு காவல்துறையில் ரௌடிகளை கண்காணிக்க பயன்படுத்தப்படும் 'ட்ராக் கேடி' (Track KD app) செயலிக்கு தேசிய குற்ற ஆவண காப்பக பதக்கம் கிடைத்துள்ளது. 2022 ஆம் ஆண்டு நவம்பர் 25-ஆம் தேதி அறிமுகம் செய்யப்பட்ட இந்தச் செயலியின் மூலம் மாநிலம் முழுவதும் ரௌடிகள் கண்காணிக்கப்படுகிறார்கள்.
- சாலை விபத்துகளில் சேதமடைந்த வாகனங்களில் சிக்கிக் கொள்பவர்களின் உயிரைக் காக்க **வீரா வாகன** சேவை தொடங்கப்பட்டுள்ளது.
- கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தை செப்டம்பர் 15-ம் தேதி அண்ணா பிறந்தநாள் அன்று காஞ்சிபுரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
- கழிவுநீர் மற்றும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் விரிசல் உடைப்புகளை எளிதில் கண்டறிய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் இயங்கும் ரோபோவாய் சென்னை ஐஐடி மாணவர்கள் உருவாக்கியுள்ளனர்.
- பாரம்பரிய தொழிலை மேற்கொண்டு வரும் கைவினை கலைஞர்களுக்கு பயிற்சி மற்றும் நிதிஉதவி வழங்கும் பிரதம மந்திரியின் விஸ்வகர்மா திட்டத்தில் உள்ள வழிகாட்டு நெறிமுறைகளை ஆய்வு செய்ய மாநில திட்டக்குழு துணைத் தலைவர் 'ஜெ.ஜெயரஞ்சன்' தலைமையில் 5 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.
    - விஸ்வாகர்மா ஜெயந்தி செப்- 17
- வேங்கை வயல் சம்பவம் தொடர்பாக விசாரிக்க உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி சத்தியனாராயணன் தலைமையில் ஒருநபர் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.
- கவிஞர் தமிழ் ஒளியின் நூற்றாண்டு (1923-2023 ) விழாவையொட்டி, தஞ்சை தமிழ் பல்கலைகழகத்தில் அவரது மார்பளவு சிலை அமைக்கப்படவுள்ளது.
- தமிழகத்தில் சென்னை- மைசூர், சென்னை- கோவை இடையே வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்பட்டு வருகிறது.
    - அடுத்ததாக திருநெல்வேலி-சென்னை இடையே செப்-24 முதல் வந்தே பாரத் ரயில் இயக்கப்படவுள்ளது.
    - இந்தியாவின் முதல் வந்தே பாரத் இரயில் பிப்ரவரி 2019இல் டெல்லி-வாரணாசி இடையே இயக்கப்பட்டது.

- வந்தே பாரத் ரயில்வே சென்னை அருகில் உள்ள ICF தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்றன.

- தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க கொள்கை 2023 வெளியீடு
  - புத்தொழில் முனைவு மற்றும் முதலீட்டு பண்பாட்டை பரவலாக்கும் விதமாக, 'ஸ்டார்ட் அப் தமிழா' என்ற 'டிவி' நிகழ்ச்சி தயாரிக்கப்படும்.
  - 'ஸ்டார்ட் அப் ஸ்மார்ட் கார்டு திட்டம்' நடைமுறைப்படுத்தப்படும்.
- 4 ஆண்டுக்கு ஒருமுறை நடத்தப்பட்ட புலிகள் கணக்கெடுப்பு இனி ஆண்டுக்கு ஒருமுறை நடத்தப்படும்.
  - நீலகிரி மாவட்டத்தில் 40 நாளில் 4 வயதான புலிகள், 6 குட்டிப்புலிகள் என 10 புலிகள் இறந்துள்ள நிலையில் கணக்கெடுப்பு ஆண்டுக்கு ஒருமுறை நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
  - நாட்டில் புலிகள் அதிகம் உள்ள பகுதியாக முதுமலை புலிகள் காப்பகம் உள்ளது.
- கிராமப்புறங்களில் பொதுமக்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் 'ஊராட்சி மணி' திட்டத்தை தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. முதல்வர் மு.க.ஸ்டாலின் 'ஊராட்சி மணி' பிரத்யேக அழைப்பு மையத்தை திறந்து வைத்தார்.
  - பொதுமக்கள், தங்கள் புகார்களைத் தெரிவிக்கும் வகையில் மைய அழைப்பு எண்' 155340' வழங்கப்பட்டுள்ளது.
- தமிழக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலராக அர்ச்சனா பட்நாயக் நியமிக்கப்பட்டுள்ளார்.
- நாட்டில் விற்பனை செய்யப்படும் மொத்த மின்சார வாகனங்களில் 40% தமிழகத்தில் இருந்து தயாரிக்கப்பட்டவை என்று மத்திய சாலைப் போக்குவரத்து துறை அமைச்சக வாகன் புள்ளிவிவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு எளிமைப்படுத்தப்பட்ட ஊராட்சிகள் கணக்குகள் திட்டத்தின் கீழ் TNPASS என்ற புதிய இணையதளத்தைத் தொடங்கி வைத்தார். இது கிராம ஊராட்சித் தலைவர்கள் கணக்குகளின் இருப்பு விவரங்களை அறிய வங்கி அலுவலரைச் சார்ந்து இருத்தலைக் குறைக்கிறது.

## இந்தியா

- இந்திய தண்டனைச் சட்டம் (ஐபிசி), குற்றவியல் நடைமுறைச் சட்டம் (சிஆர்பிசி) மற்றும் இந்திய சாட்சியச் சட்டம் ஆகியவற்றுக்குப் பதிலாக மூன்று புதிய மசோதாக்களை மத்திய அரசு ஆகஸ்ட் 11ஆம் தேதி மக்களவையில் அறிமுகப்படுத்தியது.
  - இந்திய தண்டனைச் சட்டம் (ஐபிசி) 1860 – பாரதிய நியாய சம்ஹிதா
  - குற்றவியல் நடைமுறைச் சட்டம் (சிஆர்பிசி) 1898 – பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதா
  - இந்திய சாட்சியச் சட்டம் 1872 – பாரதிய சாக்ஷிய மசோதா
  - பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதா மசோதா 2023 பிரிவு 473 ன்படி கருணை மனுவின்

மீது குடியரசுத தலைவரின் தீர்ப்பே இறுதியானது.

- ரயில்வே வாரியத்தின் முதல் பெண் தலைவராக ஜெயா வர்மா சின்ஹா நியமிக்கப்பட்டுள்ளார்.
    - ரயில்வே வாரியம் 1901 இல் உருவாக்கப்பட்டது.
- மக்களவையின் 543 தொகுதிகள், மாநிலங்களின் 4, 120 சட்டப்பேரவைத் தொகுதிகள், 30 லட்சத்துக்கும் மேற்பட்ட உள்ளாட்சிப் பதவிகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
    - இந்த திட்டத்தை ஆய்வு செய்ய முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் 8 உறுப்பினர்கள் கொண்ட உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது.
    - 1951-52 முதல் 1967 வரை சட்டமன்றங்கள் மற்றும் மக்களவைத் தேர்தல்கள் ஒன்றாகவே நடத்தப்பட்டது.
    - இதற்காக,
        1. சட்டப்பிரிவு 83- மக்களவையின் பதவிக்காலம்.
        2. சட்டப்பிரிவு 85 - நாடாளுமன்றவை கூட்டம் ஒத்திவைப்பு, கலைப்பு.
        3. சட்டப்பிரிவு 172- நாட்டில் சட்டப் பேரவைகளின் பதவிக்காலம்.
        4. சட்டப்பிரிவு 356 - மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஆகியவற்றில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளது.
- G 20 கூட்டமைப்பு:
    - 1999 இல், உலகம் பொருளாதார நெருக்கடியில் இருந்தபோது G20 உருவாக்கப்பட்டது.
    - மொத்த உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 90% க்கும் அதிகமான பங்களிப்பை வழங்கும் உலகளவில் மிகவும் சக்திவாய்ந்த நாடுகளை குழு கொண்டுள்ளது.
    - ஜி20 குழுவில் இருக்கும் 20 நாடுகள் உலகின் 85 சதவீத ஜிடிபி மற்றும் 75 சதவீத சர்வதேச வர்த்தகத்தை கொண்டு உள்ளது.
    - அர்ஜென்டினா, ஆஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா, பிரான்சு, ஜெர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், மெக்சிகோ, ரஷ்யா, சவுதி அரேபியா, தென் ஆப்பிரிக்கா, தென் கொரியா, துருக்கி, இங்கிலாந்து, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகள் கூட்டமைப்பில் உள்ளன.

    <u>G 20 இந்திய தலைமை:</u>

    - டிசம்பர் 1, 2022 அன்று இந்தோனேசியாவிலிருந்து G20 குழுவின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றுக்கொண்டது.
    - இந்தியாவின் G20 சின்னம் - தாமரையின் மேல் அமைந்த பூமி .
    - கருப்பொருள் - 'வசுதைவ குடும்பகம்' அல்லது 'ஒரு பூமி-ஒரு குடும்பம்-ஒரு எதிர்காலம்'.
    - இந்து சமய நூல்களில் ஒன்றான மகா உபநிடத்தில் காணப்படும் சமஸ்கிருத வசனமாகும்.

    <u>G 20 மாநாடு :</u>

- 18 வது G20 உச்சி மாநாடு இந்தியாவின் புது டெல்லியில் செப்டம்பர் 9 மற்றும் 10, 2023 அன்று நடைபெற்றது . இந்த உச்சிமாநாடு G20 தலைவர்கள் உச்சி மாநாட்டை இந்தியா நடத்திய முதல் முறையாகும் .
- மாநாடு நடைபெற்ற இடம் பாரத் மண்டபம்.
- இந்தியாவின் ஆதரவால் G20 கூட்டமைப்பில் ஆப்பிரிக்க ஒன்றியம் முழு நேர உறுப்பினராக இணைக்கப்பட்டது.

2024 G20 மாநாடு:

- 2024 க்கான G20 பொறுப்பு பிரேசிலிடம் ஒப்படைக்கப்பட்டது.
- பிரேசில் நாட்டு அதிபர் – லூலா டாசில்வா

➢ தடுப்பூசி செலுத்துதல் தொடர்பான அனைத்து விவரங்களையும் டிஜிட்டல் முறையில் ஒருங்கிணைக்க U-WIN வலைதளம், ஜனவரி 2023 இல் தொடங்கப்பட்டது.

➢ உலகளாவிய கடல்சார் இந்திய உச்சி மாநாடு 2023 அக்டோபர், 2023 இல் புது தில்லியில் உள்ள பிரகதி மைதானத்தில், நடைபெறவுள்ளது.

- GMIS 2023 என்பது இந்தியாவின் கடல்சார் துறையில் வாய்ப்புகளை ஆராய்வதற்கும், சவால்களைப் புரிந்துகொள்வதற்கும், முதலீட்டைத் தூண்டுவதற்கும் தொழில்துறையின் முக்கிய நபர்களை ஒன்றிணைக்கும் ஒரு முதன்மையான கடல்சார் துறையை மையமாகக் கொண்ட நிகழ்வாகும்.
- முதல் உலகளாவிய கடல்சார் மாநாடு 2016 இல் மும்பையில் நடைபெற்றது.

➢ ராஜ்காட் அருகே மகாத்மா காந்தியின் நினைவிடம் அருகே காந்தி தர்ஷன் வளாகத்தில் காந்தியின் 12 அடி சிலை மற்றும் காந்தி வாடிகாவை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு செப்டம்பர் 4ஆம் தேதி திறந்து வைத்தார்.

➢ PM- e Bus Seva – பொது தனியார் கூட்டாண்மை மூலம் 10,000 மின்சார பேருந்துகள் அறிமுகம் செய்தல்.

➢ இந்தோனேசியா தலைநகர் ஜகார்த்தாவில் 20 வது ஆசியான்-இந்தியா உச்சி மாநாடு மற்றும் 18 வது கிழக்கு ஆசிய உச்சிமாநாடு நடைபெற்றது.

- தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் ஆசியான் பிரகடனத்தில் (பாங்காக் பிரகடனம்) கையெழுத்திட்டதன் மூலம் தாய்லாந்தின் பாங்காக்கில் 8 ஆகஸ்ட் 1967 இல் ஆசியான் நிறுவப்பட்டது . இதில் 10 நாடுகள் உள்ளன.
- கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பு EAS ஆனது 2005 இல் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பாக (ASEAN) தலைமையிலான முன்முயற்சியாக நிறுவப்பட்டது. முதல் உச்சி மாநாடு 14 டிசம்பர் 2005 அன்று மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்றது .

➢ சர்வதேச சிறுதனிய மாநாடு ஒடிசா மாநிலத்தில் நவம்பர் 9,10 தேதிகளில் நடைபெறவுள்ளது.

- சர்வதேச சிறுதனிய ஆண்டு 2023

- ஒடிசா மாநிலத்தின் காலா ஜீரா அரிசிக்கு புவிசார் குறியீடு கிடைத்துள்ளது.
- ஹிமாச்சல் மற்றும் லடாக் பகுதிகளை இணைக்கும் உலகின் மிக நீளமான உயரமான ஷிங்குன் லா சுரங்கப் பாதை பணியை தேசிய நெடுஞ்சாலை மற்றும் கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் கட்டமைக்கிறது.
- இந்தியாவின் 41 வது UNESCO பாரம்பரிய தளமாக சாந்தி நிகேதன் சேர்க்கப்பட்டுள்ளது.
    - மேற்கு வங்கத்தின் பிர்பூம் மாவட்டத்தில் அமைந்துள்ளது.
    - 1862 இல் , ரவீந்திரநாத் தாகூரின் தந்தை, தேபேந்திரநாத் தாகூர் , சாந்திநிகேதன் என்ற வீட்டைக் கட்டி ஆசிரமத்தை நிறுவினார்.
- நிலம் வாங்குவதற்கான இ-பூமி போர்ட்டல் சேவை ஹரியானா மாநிலத்தில் தொடங்கப்பட்டுள்ளது.
    - ஹரியானா மாநிலத்தில் நில ஒப்பந்தங்களில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்காக தொடங்கபட்டது.
- உலக பாரம்பரிய சின்னங்களின் பட்டியலில் கர்நாடகாவின் 'ஹொாய்சாலா புனித கோயில்' சேர்க்கப்பட்டுள்ளது. இது
    - யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட இந்தியாவின் 42 வது பாரம்பரிய தளம் ஆகும்.
- தேசிய மருத்துவ ஆணையத்திற்கு சர்வதேச அங்கீகாரம் :
    - இந்தியாவில் மருத்துவக் கல்லூரிகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் தேசிய மருத்துவ ஆணையத்திற்கு (NMC) மருத்துவக் கல்விக்கான உலக கூட்டமைப்பின் (WFME) அங்கீகாரம் கிடைத்துள்ளது.
- நாரி சக்தி வந்தன் அதினியம் - மகளிருக்கான 33% இட ஒதுக்கீடு மசோதா
    - புதிய நாடாளுமன்றத்தின் முதல் மசோதாவாக 'நாரி சக்தி வந்தன் அதினியம்' ( மகளிருக்கு அதிகாரமாளிக்கும் சட்டம் ) மசோதா தாக்கல் செய்யப்பட்டது .
    - இந்திய அரசியலமைப்பின் 128 வது திருத்த மசோதாவான இதனை மக்களவையில் மத்திய சட்டத்துறை அமைச்சர் அர்ஜூன்ராம் மேக்வால் அறிமுகம் செய்தார்.
    - இந்த மசோதாவின் மூலம் நாடாளுமன்றத்தில் தற்போது 82 ஆக உள்ள பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை 181 ஆக உயரும்.
    - மகளிருக்கான இடஒதுக்கீட்டில் 3-ல் ஒரு பங்கு பட்டியலின பெண்களுக்கு உள்ஒதுக்கீடு வழங்கப்படவுள்ளது .
    - இந்த மசோதா மக்களவை, மாநிலங்களவையில் 3 இல் 2 பங்கு ஆதரவுடன் நிறைவேற்றப்பட வேண்டும். இதன்
    - பிறகு நாட்டில் உள்ள 50% மாநில சட்டப்பேரவைகளில் நிறைவேற்றப்பட வேண்டும்.
    - மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் புதிய தொகுதிகள் மறுவரையறை செய்யப்பட்டு 2029 ஆண்டு முதல் இம்மசோதா அமலுக்கு வரும்.
    - சட்ட மசோதா அமலுக்கு வந்த பிறகு 15 ஆண்டுகள் செல்லுபடியாகும். அதன் பிறகு காலத்தை நீட்டித்து கொள்ளலாம்.
    - கடந்து வந்த பாதை

- மகளிர் இட ஒதுக்கீடு மசோதா 1996 இல் முதல் முறையாக அறிமுகம் செய்யப்பட்டது.
- •2010 இல் மாநிலங்களவையில் இந்த மசோதா கடைசியாக நிறைவேற்றப்பட்டது.

➢ ஐக்கிய அரபு அமீரகத்துக்கு 75 ஆயிரம் டன் பாஸ்மதி அல்லாத அரிசியை ஏற்றுமதி செய்ய இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

- உலகளாவிய அரிசி ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு 40 சதவீதமாக உள்ளது. இந்தியாவிலிருந்து 140 நாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்யப்படுகிறது.

➢ 2023 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய புத்தாக்கப் பட்டியலில் தொடர்ந்து 2 வது ஆண்டாக இந்தியா 40 ஆவது இடத்தை தக்க வைத்துள்ளது.

- இதனை உலக அறிவுசார் சொத்துரிமை நிறுவனம் (WIPO) வெளியீட்டு வருகிறது.

➢ இந்திய முதியோர் அறிக்கை 2023

- 2050 ஆண்டிற்குள் இந்தியாவின் மக்கள் தொகையில் 20%பேர் முதியவர்களாக இருப்பார்கள் என்று கணிக்கப்படுகிறது.
- தற்பொழுது, இந்தியாவில் உள்ள முதியவர்களில் 40%க்கும் அதிகமானோர் ஏழ்மையானவர்களாகவும், அவர்களில் 18.7% பேர் வருமானம் இல்லாதவர்களாகவும் உள்ளனர்.

➢ வீராங்கனை துர்காவதி புலிகள் காப்பகம் மத்தியப் பிரதேச மாநிலத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

➢ புதிய நாடாளுமன்றம் :

- 2019ஆம் ஆண்டில் மத்தியஅரசு தொடங்கிய விஸ்டா மறுவடிவமைப்புத் திட்டத்தின் கீழ் புதிய நாடாளுமன்ற கட்டிடத்தின் கட்டுமானம் ஜனவரி 15, 2021 அன்று தொடங்கி, ஆகஸ்ட் 2022 வரை நடைபெற்றது.
- இது கட்டிடக் கலைஞர் பிமல் படேலால் வடிவமைக்கப்பட்டது மற்றும் டாடா ப்ராஜெக்ட்ஸ் லிமிடெட் மூலம் கட்டப்பட்டது.
- இது சுமார் 65,000 சதுர மீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது மற்றும் லோக்சபா (கீழ்சபை) மற்றும் ராஜ்யசபா (மேல்சபை) ஆகிய இரு அவைகளில் 1,272 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரை தங்க முடியும்.
- இது லோக்சபா உறுப்பினர்களுக்கு 888 இடங்களையும், ராஜ்யசபா உறுப்பினர்களுக்கு 384இடங்களையும் கொண்டுள்ளது, எதிர்கால விரிவாக்கத்திற்கான ஏற்பாடு.
- இது ஒரு பெரிய அரசியலமைப்பு மண்டபம், ஒரு நூலகம், குழு அறைகள், அலுவலகங்கள்மற்றும் பிற வசதிகளையும் கொண்டுள்ளது.
- இது சன்சத் பவன் என அழைக்கப்படுகிறது.

➢ பழைய நாடாளுமன்றம் :

- 1921, பிப்ரவரி 12 முதல் 1927, ஜனவரி 18 வரை கட்டப்பட்டது.
- பிரிட்டிஷ் கட்டிடக் கலைஞர்களான சர் எட்வின் லுட்யென்ஸ் மற்றும் சர் ஹெர்பர்ட் பேக்கர் ஆகியோரால் வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டது.
- நாடாளுமன்ற கட்டிடத்தை அப்போதைய கவர்னர் ஜெனரல் லார்ட் இர்வின் திறந்து

வைத்தார்.

- இது சம்விதான் சதன் என அழைக்கப்படுகிறது.

## விருதுகள்

- புற்றுநோய் மருத்துவர் 'ரவி கண்ணனுக்கு ராமன் மாகசேசே விருது வழங்கப்பட்டுள்ளது.
    - அஸ்ஸாமின் சில்சர் நகரில் கச்சார் புற்றுநோய் மருத்துவமனை தொடங்கி 5,000க்கும் மேற்பட்டோருக்கு இலவச புற்றுநோய் சிகிச்சை வழங்கி வருகிறார்.
    - ராமன் மாகசேசே விருது:
        1. ஆசியாவின் நோபல் பரிசு என அழைக்கப்படும் இது பிலிப்பைன்ஸ் நாட்டின் உயரிய விருது ஆகும்.
        2. இது 1957 இல் உருவாக்கப்பட்டது.
        3. இந்த விருதை வென்ற முதல் இந்தியர் – ஆச்சார்யா வினோபா பாவே (1958)
- ஆகஸ்ட் 27 மற்றும் 29 க்கு இடையில் மாஸ்கோவில் நடைபெற்ற முதல் BRICS கண்டுபிடிப்பு மன்றத்தில் தெலுங்கானா தலைமை கண்டுபிடிப்பு அதிகாரி சாந்தா தௌதம் உலக கண்டுபிடிப்பு விருதைப் பெற்றுள்ளார்.
    - அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் சமமான தரமான கல்வியை உறுதிசெய்து, அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் வாய்ப்புகளை ஊக்குவிக்கும் நிலையான வளர்ச்சி இலக்கு-4 க்கு சிறந்த பங்களிப்பிற்காக இந்த விருது வழங்கப்படுகிறது.
- செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வழங்கப்படும் கலைஞர் கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதை, இந்திய மொழிகளின் மத்திய நிறுவன முன்னாள் துணை இயக்குநர் க.ராமசாமிக்கு வழங்கப்பட்டது.
- 2023க்கான கி. ரா. விருது பெறுபவர் – வி. ராஜதுரை
    - விஜயா பதிப்பகத்தின் வாசகர் வட்டத்தின் சார்பாக ஒவ்வொரு வருடமும் கி.ரா. விருது வழங்கப்பட்டு வருகிறது.
    - கரிசல் இலக்கியத்தின் தந்தை, எழுத்தாளர் கி.ராஜநாராயணனின் பெயரில் சிறந்த படைப்பாளாருக்கு கி.ரா. விருதும், மேலும், விருதுடன் ரூ.5 லட்சம் பரிசு தொகையும் வழங்கப்படுகிறது.
- நோயாளிகள் பாதுகாப்பு சேவையில் சிறப்பாக செயல்பட்டதற்காக தமிழகத்திற்கு மத்திய அரசு விருது வழங்கி கௌரவித்துள்ளது.
- பசுமை ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் இந்தியாவின் முதல் பேருந்தை டெல்லியில் இந்தியா கேட் அருகே மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி தொடங்கி வைத்தார்.
- பழம்பெரும் நடிகை வஹீதா ரெஹ்மான் அவர்களுக்கு 2023 ஆம் ஆண்டிற்கான தாதா சாகேப் பால்கே வாழ்நாள் சாதனையாளர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.



DHEERAN IAS ACADEMY

- சிறந்த சுற்றுலா கிராமம்
    - நீலகிரி மாவட்டம், கேத்தி பள்ளத்தாக்கில் உள்ள உல்லாடா கிராமம் தேசிய அளவில் சிறந்த சுற்றுலா கிராமமாக, மத்திய அரசு அறிவித்துள்ளது.
- ஸ்மார்ட்சிட்டி விருதுகள் - 2022
    - "மத்திய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சகத்தின், ஸ்மார்ட்சிட்டி மிஷன் இயக்குநரால், ஸ்மார்ட்சிட்டி விருதுகள் - 2022 அறிவிக்கப்பட்டுள்ளன. இதில், கோவை மாநகராட்சிக்கு 'பில்ட் என்விரான்மென்ட் ' மற்றும் தெற்கு மண்டல அளவில் ஒட்டுமொத்தமாக ஸ்மார்ட்சிட்டி திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியது ஆகிய 2 பிரிவுகளில் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- தேசிய விண்வெளி தினத்தில் புதிய ராஷ்ட்ரிய விஞ்ஞான் புரஸ்கார் விருதுகள் வழங்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.
    - அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புதுமை கண்டுபிடிப்பில் சாதனை படைப்பவர்களை அங்கீகரிக்கும் வகையில் நான்கு பிரிவுகளின் கீழ் விஞ்ஞான் ரத்னா, விஞ்ஞான் ஶ்ரீ, விஞ்ஞான் யுவ-சாந்தி ஸ்வரூப் பட்னாகர் மற்றும் விஞ்ஞான் டீம் என்ற பெயர்களில் விருதுகள் வழங்கப்படும்.
    - இந்த புதிய விருதுகளுக்காக அறிவியலின் 13 துறைகளைச் சேர்ந்த விஞ்ஞானிகளை மத்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் தலைமையிலான குழு தேர்வு செய்யும்.
    - 'விஞ்ஞான் ரத்னா' - அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் வாழ்நாள் சாதனை படைப்பவர்களுக்கு 'விஞ்ஞான் ரத்னா' விருது வழங்கப்படும் .
    - 'விஞ்ஞான் ஶ்ரீ-இத்துறையில் சிறப்பான பங்களிப்பை அளித்தவர்களுக்கு 'விஞ்ஞான் ஶ்ரீ' விருது வழங்கப்படும்.
    - 'விஞ்ஞான் டீம்' -3 அல்லது அதற்கு மேற்பட்ட விஞ்ஞானிகள் / ஆராய்ச்சியாளர்கள் / புதுமை கண்டுபிடிப்பாளர்கள் குழுவாக பணியாற்றி சிறப்பான பங்களிப்பை அளித்தால் அவர்களுக்கு 'விஞ்ஞான் டீம்' விருது வழங்கப்படும்.
    - இந்தியாவில் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புதுமை கண்டுபிடிப்பு துறையில் மிக உயரிய விருதாக 'தி ராஷ்ட்ரிய விஞ்ஞான் புரஸ்கார்' விருது திகழும்
    - இந்த விருதுகள் தேசிய தொழில்நுட்ப தினமான மே11-ம் தேதி அறிவிக்கப்பட்டு, தேசிய விண்வெளி தினமான ஆகஸ்ட் 23-ம் தேதி வழங்கப்படும்.
    - அறிவியல் தொழில்நுட்பத் துறையில் சிறப்பான பங்களிப்பை அளிக்கும் 45 வயதுக்கு உட்பட்ட இளம் விஞ்ஞானிகளுக்கு, அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி கவுன்சில் கடந்த 1958-ம் ஆண்டு முதல் 'தி சாந்தி ஸ்வரூப் பட்னாகர் விருதுகளை வழங்கி வருகிறது.
- அமெரிக்காவின் நார்மன் இ போர்லாக்விருது 2023 ஒரிஷாவைச் சேர்ந்த விஞ்ஞானி சுவாதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- 700 மெகாவாட் உற்பத்தி திறன் கொண்ட காக்ராபூர் அணுமின் நிலையம் தனது முழு உற்பத்தி திறனை எட்டியுள்ளது.
    - உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட முதல் அணுமின் நிலையம்.
- சூரியனின் புறவெளியை ஆய்வு செய்வதற்காக ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து PSLV c 57 ராக்கெட் மூலம் ஆதித்யா எல் – 1 விண்கலம் ISROஆல் ஏவப்பட்டுள்ளது.
    - பூமியில் இருந்து 15 இலட்சம் கி. மீ. இல் 'லக்ராஞ்சியன் பாயிண்ட் 1' (ஈர்ப்பு விசை சமமாக இருக்கும்) பகுதியில் நிலைநிறுத்தப்படவுள்ளது. இந்த புள்ளியை ஆதித்யா விண்கலம் 125 நாட்களில் அடையும்.
    - 7 பேலோடுகளை கொண்டுள்ளது.
    - சூரியனை ஆய்வு செய்யும் 4 வது நாடாக இந்தியா உள்ளது.
        1. அமெரிக்கா
        2. ஜெர்மனி
        3. ஐரோப்பிய யூனியன்
        4. இந்தியா
    - திட்ட இயக்குனர் – நிகர் ஷாஜி
        1. தென்காசி மாவட்டததை சேர்ந்தவர்.
- Project 17 Alpha (P17A) திட்டத்தின் கீழ் உள்நாட்டிலேயே கட்டப்பட்ட 7 வது போர்க்கப்பலான மகேந்திரகிரி போர்க்கப்பல் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.
    - 75% பொருட்கள் உள்நாட்டு நிறுவனங்களிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டது.
    - Project 17 Alpha (P17A)
    1. 2019 இல் அறிமுகம் செய்யப்பட்டது.
    2. இதன் கீழ் 7 கப்பல்கள் கட்டப்பட்டுள்ளன.
    3. நீலகிரி 2019, ஹிம்கிரி 2020, உதயாகிரி 2022, துணகிரி 2022, தாராகிரி 2022, விந்தயகிரி 2023, மகேந்திரகிரி 2023 .
- ஜப்பான் செப்டம்பர் 7, 2023 அன்று ஒரு எக்ஸ்ரே தொலைநோக்கி XRISM மற்றும் லேண்டர் SLIM ஆகியவற்றை கொண்ட HII-A என்ற ராக்கெட் ஏவியது.
    - ஜப்பானின் விண்வெளி ஆய்வு மையம் – JAXA
- ஸ்பெயினில் உள்ள ஏர்பஸ் விமான தயாரிப்பு நிறுவனம் இந்தியா விமான படைக்கு c 295 போக்குவரத்து விமானங்களை விநியோகிக்க தொடங்கியுள்ளது.
- தற்சார்பு இந்தியா திட்டதில் இணைகிறது போயிங் நிறுவனம் : அமெரிக்கவின் மிகப்பெரிய விமான தயாரிப்பு நிறுவனமான போயிங், P-8 I என்ற கடல்சார் கண்காணிப்பு விமானத்தின் தொழில்நுட்பம், உதிரி பாகங்களை இந்தியாவில் தயாரிக்க திட்டமிட்டுள்ளது.
- சந்திராயன் - 3
    - இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) நிலவை ஆய்வு செய்வதற்காக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய சந்திரயான்-3

விண்கலத்தை சந்திராயன் 2 ஐ தொடர்ந்து வடிவமைத்துள்ளது.

- ஆந்திராவின் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி தளத்தில் இருந்து ஏவு வாகனம்- LMV III மூலம் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.
- நிலவின் தென்துருவத்தில் தரையிறங்கிய முதல் நாடு எனும் புதிய சரித்திரத்தை பெற்று இந்தியா சாதனை படைத்துள்ளது.
- சந்திரயான்-3 லேண்டர் மற்றும் ரோவர் அமைப்பைக் கொண்டுள்ளது. நிலவில் தரையிறங்கிய லேண்டர் விக்ரம் என்றும் சந்திரனின் மேற்பரப்பை ஆராயும் ரோவர் பிரக்யான் என்றும் அழைக்கப்படுகிறது.
- நிலவின் தென்துருவத்தை ஆய்வு செய்ய ISROவால் அனுப்பப்பட்ட சந்திரயான் 3 இன் 'விக்ரம்' லேண்டர் கடந்த மாதம் 23 ஆம் தேதி நிலவில் தரையிறங்கியது.
- நிலவில் தரையிறங்கிய நாளில் இருந்து சூரிய ஒளி இருக்கும் 14 நாட்கள் மட்டுமே செயலாற்ற லேண்டர் மற்றும் ரோவர் வடிவைமைக்கப்பட்டுள்ளது.
- விக்ரம் லேண்டர் சந்திரனின் மேற்பரப்பைத் தொட்ட இடத்திற்கு "சிவ் சக்தி" என்றும், 2019 இல் தோல்வியடைந்த சந்திரயான் -2 மிஷன் விபத்துக்குள்ளான இடத்திற்கு "திரங்கா புள்ளி " என்றும் பெயரிடப்பட்டுள்ளது.
- சந்திரயான் 3 திட்ட இயக்குநர் வீரமுத்துவேல்

- ஸ்பெயின் நாட்டின் ஏர்பஸ் நிறுவனத்தின் முதல் சி295 போக்குவரத்து விமானம் இந்திய விமானப்படையில் செப் 25 அன்று இணைக்கப்பட்டது.
- உணவு பாதுகாப்புப் பொருள் கேட்டுப் போகாமல் இருக்க புதிதாக 'பக்பஸ்டேர்' எனும் புரதப் பதனப் பொருளை மைசூர் மத்திய உணவு தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம் உருவாக்கி உள்ளது.

## வெளிநாடு

- சிங்கப்பூரின் 9 வது அதிபராக தர்மன் சண்முகரத்னம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- உலகில் முதல்முறையாக பின்லாந்து நாட்டில் டிஜிட்டல் பாஸ்போர்ட் அறிமுகம் செய்யப்படவுள்ளது.
- திரவ ஹைட்ரஜனில் இயங்கும் உலகின் முதல் மின்சார விமானம் ஸ்லோவேனியா நாட்டில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- பாகிஸ்தான் நாட்டின் முதல் பெண் இந்திய தூதர் - கீதிகா ஸ்ரீவஸ்தவா
- அமெரிக்காவின் நியூ ஜெர்சியின் ராபின்வில்லி டவுன்ஷிப்பில் பாப்ஸ் சுவாமி நாராயண் அக்ஷர்தாம் கோயில் கட்டப்பட்டுள்ளது.
    - கம்போடியாவில் உள்ள அங்கோர்வாட்டிற்கு அடுத்த படியாக நியூ ஜெர்சியில் உள்ள இந்த கோயில் இரண்டாது பெரிய கோயிலாக கருதப்படும்.
- நியூயார்க்கில் QUAD கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்ற கூட்டம் செப் 22 அன்று

நடைபெற்றது.

- QUAD -The Quadrilateral Security Dialogue
- இலவச திறந்த வளமான மற்றும் உள்ளடக்கிய இந்தோ- பசுபிக் பிராந்தியற்காக பணியாற்றுவதை முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது.
- இதில் நான்கு நாடுகள் அடங்கும்

  அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான்
- 2004 ஆம் ஆண்டு சுனாமிக்கு பிறகு நிவாரணப் பணிகளை ஒருங்கிணைக்க நான்கு நாடுகளும் ஒன்றிணைந்தபோது மன்றம் அதன் தோற்றத்தை கண்டறிந்தது.
- ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபே 2007 இல் QUAD அமைப்பதற்கான யோசனையை முதலில் முன்வைத்தார்.

➢ இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா வழித்தடம் (IMEC)

- சமீபத்தில், இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா பொருளாதார தாழ்வாரம் (IMEC) திட்டம் புது தில்லியில் G20 உச்சிமாநாட்டில் கையெழுத்தானது, இது இந்தியாவிற்கு குறிப்பிடத்தக்க புவிசார் அரசியல் மற்றும் பொருளாதார தாக்கங்களைக் கொண்டுள்ளது.
- IMEC ஆனது இரயில் பாதை, கப்பலில் இருந்து இரயில் நெட்வொர்க்குகள் மற்றும் இரண்டு தாழ்வாரங்களில் விரிவடையும் சாலை போக்குவரத்து வழிகளைக் கொண்டிருக்கும். 1. கிழக்கு தாழ்வாரம் - இந்தியாவை அரேபிய வளைகுடாவுடன் இணைக்கிறது . 2. வடக்கு தாழ்வாரம் - வளைகுடாவை ஐரோப்பாவுடன் இணைக்கிறது.
- IMEC நடைபாதையில் மின்சார கேபிள், ஹைட்ரஜன் பைப்லைன் மற்றும் அதிவேக டேட்டா கேபிள் ஆகியவை அடங்கும் .
- இந்தியா, அமெரிக்கா, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஐரோப்பிய ஒன்றியம், இத்தாலி, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் இத்திட்டத்தில் கையெழுத்திட்டுள்ளன. இது சீனாவின் BRI திட்டத்திற்கு மாற்றாக கருதப்படுகிறது.
- பெல்ட் & ரோடு முன்முயற்சி (BRI) என்பது ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பா கண்டங்களில் பரவியுள்ள பல நாடுகளுக்கு இடையே இணைப்பு மற்றும் ஒத்துழைப்பில் கவனம் செலுத்தும் ஒரு லட்சிய திட்டமாகும். 2013 இல் அறிவிக்கப்பட்டது.

## விளையாட்டு

➢ ஆடவர் ஹாக்கி 5 ஆசியக் கோப்பைப் போட்டியில் பாகிஸ்தானை 2-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இந்தியா சாம்பியன் ஆனது.

➢ உந்திய போட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ராவிற்கு சுவிட்சர்லாந்து சுற்றுலாத் துறை சார்பில் பாராட்டு விழா நடத்தப்பட்டது.

➢ பிரேசிலில் நடைபெற்ற ஏர்ரைபிள் 10மீ உலக கோப்பை போட்டியில் இந்தியாவின்

இளவேனில் வாலறிவன் தங்கம் வென்றுள்ளார்.

- 19-வது ஆசிய விளையாட்டு போட்டி
    - 19-வது ஆசிய விளையாட்டு சீனாவின் ஹாங்சோவ் நகரில் இன்று (சனிக்கிழமை) தொடங்கி அக்டோபர் 8-ந் தேதி வரை நடக்கிறது. ஆசிய விளையாட்டு போட்டியை சீனா நடத்துவது இது 3-வது முறையாகும்.
    - இந்திய அணியில் 655 வீரர், வீராங்கனைகள் இடம் பிடித்துள்ளனர். அவர்கள் 39 விளையாட்டுகளில் பங்கேற்கிறார்கள்.
- உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில் ரஜதாலேப் பகுதியில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமையவுள்ளது.
    - கான்பூர், லக்னோவிற்கு அடுத்தபடியாக நாட்டின் 3 வது சர்வதேச கிரிக்கெட் அரங்கமாக இது திகழும்.

## நியமனங்கள்

- இந்திய ராணுவத்தின் 29ஆவது தலைமை தளபதியாக ஜெனரல் மனோஜ் பாண்டே, பொறுப்பேற்றார்.

## முக்கிய தினங்கள்

- உலக தேங்காய் தினம் – செப் 2
    - உலகில் அதிக தேங்காய் உற்பத்தி செய்யும் நாடு – இந்தியா
- தேசிய ஊட்டசத்து வாரம் செப் 1-செப் 7
    - 2023 கருப்பொருள்: அனைவருக்கும் மலிவு விலையில் ஆரோக்கியமான உணவு.
    - 1982 முதல் கொண்டாடப்படுகிறது.
- சர்வதேச எழுத்தறிவு தினம் செப் 08
- உலக முதலுதவி தினம் - ஆண்டுதோறும் செப்டம்பர் இரண்டாவது சனிக்கிழமையன்று கொண்டாடப்படுகிறது .
- உலக தற்கொலை தடுப்பு தினம் – செப் 10
- மகாகவி நாள் – செப் 11
    - மகாகவி பாரதியாரின் நினைவு தினம் மகாகவி தினமாக 2021 முதல் கொண்டாடப்படுகிறது.
- சர்வதேச மக்களாட்சி தினம் –செப் 15
- உலக ஓசோன் தினம் செப் 16
- சமூக நீதி நாள் – செப் 17
    - 2021 முதல் பெரியார் பிறந்த நாள் சமூக நீதி நாளாக கொண்டாடப்படுகிறது.
- இந்திய ரயில்வே பாதுகாப்பு படை தினம் செப்-20
    - இதனால் 1985 செப்.,20ல் ' ரயில்வே பாதுகாப்பு படை உருவாக்கப்பட்டது.
    - தலைமையகம் - டெல்லி
    - இயக்குனர் - மனோஜ் யாதவா
- சர்வதேச பூஜ்ஜிய உமிழ்வு நாள் செப் – 21

- கார்பன் உமிழ்வை குறைத்து சுற்றுச் சூழலை பாதுகாக்க 2008 முதல் கடைபிடிக்கப்படுகிறது.

- உலக சுற்றுலா தினம் செப்டம்பர் 27
    - 2023 க்கான கருப்பொருள்: சுற்றுலா மற்றும் பசுமை முதலீடு.
    - சுற்றுலாத் துறையில் தமிழகத்தை புதிய உச்சதிற்கு கொண்டு செல்வதை நோக்கமாகக் கொண்டு 'தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கையை முதல்வர் செப் 26 அன்று வெளியிட்டுள்ளார்.